# கோடை கால விளையாட்டு பயிற்சி முகாம் நிறைவு விழா

**விக்கிரவாண்டி, ஜூன் 4–**

விக்கிரவாண்டி சூர்யா இன்ஜினியரிங் கல்லூரியில் நடைபெற்று வந்த கோடை கால விளையாட்டு பயிற்சி முகாம் நிறைவு விழா நடந்தது.

சூர்யா இன்ஜினியரிங் கல்லூரி வளாகத்தில் நடந்த மாணவ, மாணவிகளுக்கான மால்கம், ரோப் மால்கம், ஜிம்னாஸ்டிக், வாலிபால் கோடைகால இலவச பயிற்சி முகாம் நடந்தது.

இதன் நிறைவு விழாவிற்கு அறக்கட்டளை தலைவர் டாக்டர் கவுதமசிகாமணி தலைமை தாங்கினார். செயலாளர் டாக்டர் அசோக்சிகாமணி முன்னிலை வகித்தார். பயிற்சி ஆசிரியர் அறிவழகன் வரவேற்றார். முகாமில் பங்கேற்ற பயிற்சி மாணவ, மாணவிகளுக்கு சீருடை மற்றும் சான்றிதழ்களை விசாலாட்சி பொன்முடி வழங்கி சிறப்புரையாற்றினார்.

விழாவில் விழுப்புரம் நகர் மன்ற தலைவர் ஜனகராஜ், கல்லூரி முதல்வர் சாந்தி, துணை முதல்வர் ராம்குமார், சிகா முதுகலை கல்லூரி முதல்வர் பாபு, சிகா ஆசிரியர் பயிற்சி கல்லூரி முதல்வர் ராதாகிருஷ்ணன், வீடுர் ஸ்டேட் பாங்க் மேலாளர் சந்திரன், மகேஸ்வரன், அருட்செல்வன், செல்வம், பயிற்சியாளர்கள் சோமசுந்தரம், சீனுவாசன், பரணிதரன், சந்திரன், டேனியல் பினோ பிரசாந்த், வல்லபராசு, மால்கம் கழக துணை செயலாளர் தனசேகர் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக கோடை முகாமில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளின் செயல்விளக்க நிகழ்ச்சி நடந்தது.



விக்கிரவாண்டி சூர்யா இன்ஜினியரிங் கல்லூரியில் நடந்த கோடை கால விளையாட்டு பயிற்சி முகாம் நிறைவு விழாவில் மாணவர்கள் செயல் விளக்கமளித்தனர்.